New Lives. New Futures.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Limited. Permission required for reproduction.

Publication: Tamil Murasu

Date: Wednesday, 19 April 2023

Page: NIL

Headline: முன்னாள் கைதிகளின் குடும்பங்களுக்கு ரமலான் உற்சாகம்

Link: https://www.tamilmurasu.com.sg/lifestyle/story20230419-128270

# முன்னாள் கைதிகளின் குடும்பங்களுக்கு ரமலான் உற்சாகம்



19 Apr 2023 05:30 | 2 mins read

நியூஜென் கபண்ட் 2018ஆம் ஆண்டு முதல் ரமலான் மாதத்தில் முன்னாள் கைதிகளின் குடும்பங்களுக்கு இஃப்தார் அன்பளிப்புகளை வழங்கி வருகிறது.

லாபநோக்கமற்ற அமைப்பான நியூஜென் கபண்ட் திருந்திய கைதிகளின் குடும்பங்களில் தலைமுறை தாண்டிய குற்றச்

செயல்களைத் தடுப்பதற்கு முனைகிறது. இது குடும்பங்களுடன் நெருங்கி, முக்கியமாக பிள்ளைகளின் நலனைக் கவனத்தில்கொண்டு அதற்கு உதவி வருகிறது. இதுவரை ஏறத்தாழ ஆயிரம் பிள்ளைகள் நியூ-ஜென்னின் திட்டங்கள், சேவைகளால் பயனடைந்துள்ளனர். இந்த ஆண்டும் 140 குடும்பங்களுக்கு இஃப்தார்

NeuGen
New Lives. New Futures.

அன்பளிப்புகளை வழங்கி சிறப்பித்தது.

போதைப்பொருள் விற்பனைக்காக கணவர் பன்னிரண்டு ஆண்டுகால சிறைவாசம் சென்றபோது பத்து-மாத கைக்குழந்தையுடன் தனியாக விடப்பட்டார் திருவாட்டி சலிமா (உண்மைப் பெயரல்ல).

நீண்டகால விசாவில் சிங்கப்பூருக்கு வந்து, தமிழகத்தில் பிளஸ் 2 வரை மட்டுமே பயின்றிருந்த அவருக்கு உதவ குடும்பத்தாரோ நண்பர்களோ யாரும் இல்லை.

தற்போது இல்லப் பணியாளராக மாதம் $1,500 மட்டுமே ஈட்டி வரும் அவருக்கும் அவரின் 13 வயது மகனுக்-கும் கடந்த மூன்றாண்டு காலமாய் கைகொடுத்து வருகிறது நியூஜென் ஃபண்ட்.

திருவாட்டி சலிமா உள்ளிட்ட முன்னாள், தற்சமயம் சிறை யிலிருக்கும் கைதிகளின் குடும்பத்தாருக்கும் ரம-லான் உற்சாகத்தைப் பரப்ப முற்பட்டது நியூஜென் ஃபண்ட் அமைப்பு. ஏப்ரல் 12ஆம் தேதி அன்று மாலை காத்திப் வட்டார உள்துறைக் குழு NS மன்றத்தில் கிட்டத்தட்ட 500 பேர் ஒன்றுகூடி இஃப்தார் கொண்டாட்டத்-தில் கலந்துகொண்டனர்.

நியூஜென்னின் இஃப்தார் அன்பளிப்புகளைப் பெற்றுக்கொண்டு கொண்டாடி மகிழ்ந்த 140 குடும்பங்களில் திருவாட்டி சலிமாவும் அவரின் மகனும் அடங்குவர். இலவச துணைப்

பாடத் திட்டம் அவரின் மகனது கல்விக்குப் பக்கபலமாய் இருந்து வருகிறது.

“பொது நிகழ்வுகளுக்கோ கொண்டாட்டங்களுக்கோ செல்லும்போது எங்களை சிலர் வித்தியாசமாகப் பார்ப்பதுண்டு. அது எங்களை சங்கடப்படுத்தும். நியூஜென் நிகழ்வுகளிலோ எங்களைப் போன்றோரைச் சந்-திக்க முடிகின்றது.

“எனது மகனுக்கு நண்பர்கள் கிடைத்துள்ளனர். இங்கு நாங்கள் அரவணைக்கப்படுகிறோம்; குடும்பமாக திகழ்கிறோம்,” என்றார் 35 வயது திருவாட்டி சலிமா.

நோய்ப்பரவல் காலத்துக்குப் பிறகு முதன்முறையாக நேரடி நிகழ்வாக நடைபெறும் நியூஜென்னின் இஃப்தார் கொண்டாட்டத்தில் உள்துறை துணை அமைச்சர் டாக்டர் முகமது ஃபைஷல் இப்ராகிம் கலந்து-கொண்டார். தேசிய வளர்ச்சித் துணை அமைச்சருமான அவர், ஒரு சமூகமாக குடும்பப் பிணைப்பை வலுப்படுத்துவதற்கும் பல்லினத்தோரும் ஒன்றுகூடி மகிழ்வதற்கும் இதுபோன்ற கொண்டாட்டங்கள் வாய்ப்-பளித்ததாகக் கூறி நியூஜென்னின் இம்முயற்சியைப் பாராட்டினார்.

டாக்டர் ஃபைஷல் இப்ராகிம், பிள்ளைகளே நமது எதிர்காலம் என்பதை வலியுறுத்தினார்.

நியூஜென் போன்ற அமைப்புகளுடன் இணைந்து அரசாங்கம் தொடர்ந்து பிள்ளைகளுக்கு ஆதரவளிக்கும், அவர்கள் உகந்த முறையில் வளர்வதற்கு உதவிக்கரம் நீட்டும் என்றும் அவர் உறுதியளித்தார்.

மாது அன்பளிப்பு பைகளைப் பெற்றுக்கொண்டார்.

NeuGen
New Lives. New Futures.

Translation:
**Ramadan festive joy for the families of ex-offenders**

NeuGen Fund has been giving out goodies to the families of ex-offenders during the month of Ramadan since 2018. A non-profit organisation that aims to prevent intergenerational offending, NeuGen Fund works closely with the families, especially on the well-being and welfare of the children. To date, one thousand children have benefited from the programmes and services of NeuGen. They also presented Iftar goodie bags to 140 families this year.

When her husband went to serve 12 years in prison for drug trafficking offence, Madam Salima (not real name) was left alone with her 10-month-old baby. She had come from Tamil Nadu to Singapore on a long-term visit pass, with limited education and no family members or friends to support her.

At present, she earns $1,500 monthly as a domestic worker. NeuGen Fund has been providing support to her and her 13-year-old son for the past three years.

NeuGen strived to spread festive joy among the families of ex-offenders and inmates, including Madam Salimah who gathered with around 500 people at the Iftar celebration on the evening of 12 April 2023 at HomeTeamNS Khatib.

Among the 140 families who received the Iftar festive goodies were Madam Salimah and her son. Her son also benefited from the sponsored tuition programme by NeuGen.

“When we attend celebrations or public events, some people look at us differently. This makes us feel upset. However, at NeuGen’s events we can meet others who are like us. My son has made friends here. We are embraced and accepted as a family here,” said the 35-year-old Madam Salimah.

Held live for the first time after the Covid-19 pandemic, the NeuGen Iftar celebration event was graced by Associate Professor Dr Faishal Ibrahim, Minister of State for Home Affairs.

Dr Faishal who is also the Minister of State for National Development praised the efforts of NeuGen to strengthen family ties as a community and allow people of different races gather and interact. He emphasised that children are our future.

He said that the government will continue to work together with organizations like NeuGen to provide support to children and lend a helping hand to ensure they grow up in the best way possible.